**செய்தி வெளியீடு எண்: 571** **நாள் : 12.11.2014**

தமிழ் வளர்ச்சித் துறை

செய்தி வெளியீடு

கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் **'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது'** ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்படுகிறது.

விருது பெறுபவர்க்கு விருதுத் தொகை ரூ.1,00,000/—த்துடன் ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும்

இவ்வகையில், 2014 – ஆம் ஆண்டுக்கு **'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது'-க்கு** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. போட்டிக்குரிய மென்பொருள்கள் **2011, 2012, 2013**ஆம் ஆண்டுகளுக்குள் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைதளத்தில் (**www.tamilvalarchithurai.org**) இலவசமாகப் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

விருதுக்கான விண்ணப்பம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள் **31.12.2014**

**அனுப்ப வேண்டிய முகவரி**

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.

தொடர்பு எண். 28190 412; 28190413

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**